விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 130 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 15 திங்கட்கிழமை (28.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர்கள்

### யாழ்.மாவட்டம்


கணிதப் பிரிவு
கந்ததாசன் தசரத்
ஹாட்லிக் கல்லூரி


கலைப் பிரிவு
மயூரா மணிவண்ணன்
வேம்படி மகளிர் கல்லூரி

### கிளிநொச்சி மாவட்டம்


உயிரியல் பிரிவு
தர்மகுலசூரியர் சிவானுஜா
கிளி.இந்துக் கல்லூரி


கணிதப் பிரிவு
தர்மராஜா ஆற்றலன்
கிளி.மகா வித்தியாலயம்


கலைப் பிரிவு
மகேந்திரன் கம்சா
முழங்காவில்
மகா வித்தியாலயம்


வர்த்தகப் பிரிவு
சூரியவராராவ் திபோசன்
முழங்காவில்
மகா வித்தியாலயம்


உயிர்முறைமைகள்
தொழில்நுட்பப் பிரிவு
ஸ்ரீ ரங்கநாதன் ஆரணிகா
முழங்காவில்
மகா வித்தியாலயம்

### வவுனியா மாவட்டம்


உயிரியல் பிரிவு
முகமட் முபாரக்
முகமட் பர்ஹத்
வவு.முஸ்லிம் மகா வித்தி.


கணிதப் பிரிவு
குகதாசன் தனோஜன்
வவு.கனகராயன்குளம்
மகா வித்தியாலயம்


வர்த்தகப் பிரிவு
பிதுர்சா சற்குணம்
வவு.கலைமகள் வித்தி.


கலைப் பிரிவு
முகமது பைசல்
பாத்திமா அஸ்ரா
வவு.முஸ்லிம் ம.வித்தி.

# ஆட்சியைக் கவிழ்க்க ரணில், சஜித் காத்திருப்பு

## இது நடக்காத கனவு என்கிறார் ரில்வின் சில்வா

(கொழும்பு)

எமது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் காத்திருக்கின்றன. ரணில் மற்றும் சஜித் ஆகியோர் இந்நாட்டின் ஜனாதிபதியாக வேண்டுமென நினைத்தால் அது அவர்களது நிறைவேறாத கனவாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுமையிலும் 9,457 பேருக்கு 3A

(கொழும்பு)

இந்த ஆண்டு நடைபெற்ற (2024) க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 9,457 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றதாகப் பரீட்சைகள் ஆணையர் ஜெனரல்

15ஆம் பக்கம் பார்க்க

## பெறுபேறு மீளாய்வு
## மே 2 - 16 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறு

15ஆம் பக்கம் பார்க்க

## தபால்மூல வாக்களிப்பு நாளையுடன் நிறைவு

### தவறாது வாக்களிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாளை செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைகிறது. வாக்களிப்புக்கான காலம் இனி நீடிக்கப்படமாட்டாது. ஆகவே

02ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் இன்றும் மழை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில்

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கனமழை வெள்ளத்தில் மூழ்கிய வீடுகள்

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் சுமார் ஒரு மணி நேரம் பெய்த கடும் மழை காரணமாக ஆங்காங்கே வெள்ளம்

15ஆம் பக்கம் பார்க்க

## சிறுமி வன்கொடுமை மூவர் அதிரடிக் கைது

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வெளிக்கொணர்வை அடுத்து நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சித்தங்கேணியில் சிறுமி ஒருவர் பாலியல்

15ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க வரி தொடர்பில் மாறாட்டத்தில் அநுர அரசு

### சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

(ஹோமாகம)

அமெரிக்காவுடனான வரிக்கொள்கை விவகாரத்திலும் அரசாங்கம் மாறுபட்ட

15ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பரில் மின்கட்டணம் மும்மடங்காக உயரும்

### வஜிர அபேவர்த்தன ஆரூடம்

(கொழும்பு)

இந்த வருடம் டிசம்பர் மாதத்தில் மின்சாரக் கட்டணம் மூன்று மடங்கு அதி

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுக்களை ஒடுக்க பொலிஸார் விசேட நடவடிக்கை


(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் பாதாள உலக நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பாதுகாப்புப் படையினரின் ஆதரவுடன் புதிய, விரிவான பாதுகாப்புத் திட்டத்தைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பாதுகாப்புத் திட்டத்தில் பொலிஸ் சிறப்புப் படையைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள், அரச புலனாய்வு அமைப்புகள் மற்றும் சாதாரண உடையில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

கூடுதலாக ரோந்துகள் மற்றும் பாதுகாப்பு மோட்டார் சைக்கிள் பிரிவும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

கொலன்னாவை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர் டான் பிரியசாத்தின் கொலையைத் தொடர்ந்து, இவ் நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளனர். (ந-7)



தேவாரப்பாடல் பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான இராவணேசனும் போற்றித் துதித்த திருகோணமலை திருக்கோணேஸ்வரராலய பஞ்ச ரத பவனி நேற்று சிறப்புற இடம்பெற்றது.

## ஆட்சியை...

வலல்லாவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இவ்வாண்டு டிசம்பரில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாவார் என கபீர் ஹசீம் கூறுகின்றார். இவ்வாண்டு தேர்தலொன்று இல்லாத நிலையில் அவர் எவ்வாறு இக் கருத்தினை வெளியிட்டார்? வாய்ப்பொன்று கிடைத்தால் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் எமக்கு 5 ஆண்டுகளுக்கான ஆணையை வழங்கியிருக்கின்றனர். அதில் இன்னும் ஒரு ஆண்டு கூட நிறைவடையவில்லை.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு மாத்திரமின்றி, அதற்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கும் மக்கள் எமக்கு வாக்களிப்பர் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே ரணில் மற்றும் சஜித் ஆகியோர் இந் நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும் என்று எண்ணினால், அது அவர்களது நிறைவேறாத கனவாகவே இருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய பின்னர் ரணில் ஜனாதிபதியானார். அவ்வாறான சம்பவம் மீண்டும் மீண்டும் இடம்பெறும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது மிகவும் முட்டாள் தனமான எதிர்பார்ப்பாகும் என்றார். (ந-7)


# தேவை

யாழ்.நகரில் இயங்கும்
நடமாடும் உணவகத்திற்கு
வேலையாள் தேவை.
077 713 4777
077 713 0839
(4051)


## தபால்...

வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள சகல அரச உத்தியோகத்தர்களும் தவறாமல் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்கு இம்முறை 647,495 அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைய கடந்த 24, 25 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பு நடைபெற்றது. இன்றும் நாளையும் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. தபால்மூல வாக்கெடுப்பு வழங்கப்பட்ட கால அவகாசம் நாளையுடன் நிறைவடையவுள்ளதால் இனி வாக்களிப்புக்கு அவகாசம் வழங்கப்படமாட்டாது.

ஆகவே தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்ற சகல அரச உத்தியோகத்தர்களும் தவறாமல் வாக்களிக்கு மாறு தேர்தல்கள் ஆணைக் குழு வலியுறுத்தியுள்ளது. (ந-7)


# 39 ஆவது பிறந்தநாளில் 3 ஆவது மாத நினைவஞ்சலி





திருமதி ர.கோகிலா (யகி)

ஆறாத் துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர மனம் நிறைய
வேண்டி வணங்குகின்றோம்.


முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

என்றும் உன் [illegible]
குடும்பத்தினர்
(1066)



# மரண அறிவித்தல்

பிறப்பு 1941 - 07 - 16



இறப்பு 2025 - 04 - 27

## நாகன் கிருஸ்ணபிள்ளை (கிட்டி மாமா)

ஈவினை தெற்கு புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் கிருஸ்ணபிள்ளை அவர்கள் நேற்று 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - ஐயாள் தம்பதியினரின் அன்பு மகனும் வேலன் - நாகி தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் அற்புதராசா, பவளராசா, பவுத்திரராசா மற்றும் காலஞ்சென்ற பவித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திரா, சர்மிலா, மயூகா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, கவிதர்சன், கிசோக், சனோஜன், சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.04.2025 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
T.P: 077 [illegible] 6245
(2833)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை களைவோம்!

## வவுனியாவில் ஜனாதிபதி அநுர

(வவுனியா)

**திஸ்ஸ விகாரை பிரச்சினையில் இருப்பது இனவாதம். இந்த பிரச்சினையை தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்க போதாது. சட்டங்களை புதிதாக உருவாக்கி இனவாதத்தை களைவோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வடக்கில் பல இடங்கள் போரால் பாதிக்கப்பட்டது. பலர் வீடுகள், வீதிகளை இழந்தனர். தாய்மார்கள் பிள்ளைகளையும், கணவர்கள் மனைவிமார்களையும் இழந்தார்கள். நண்பர்களை இழந்தனர். கவலையான பாரிய ஒரு நிலைமை தான் இருந்தது. அதுதான் யுத்தம். தற்போது போர் முடிந்து 16 வருடங்கள் கழிந்துள்ளன. இன்னும் அதன் மிச்ச சொற்பங்கள் இருக்கின்றன.

யாழில் திஸ்ஸவிகாரை தொடர்பாக ஒரு பிரச்சினை இருக்கிறது. அது என்ன பிரச்சினை. அந்த காணிகளின் உரிமையாளர்களும், பன்சாலையின் பிக்குமாருக்கும் அந்த பிரச்சினையை தீர்க்க இடமளித்தால் அவர்கள் தீர்த்துக் கொள்வார்கள். தீர்க்க இடமளிக்காமல் இருப்பது அரசியல். அவர்களுக்கு தேவை இதனூடாக இனவாதத்தை தூண்டுவது. இதன் காரணமாகவே பிரச்சினைகள் தீர்க்க முடியாமல் உள்ளது.

வடக்கின் தோல்வி கண்ட அரசியல்வாதிகள் அந்த இடத்திலே ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். தென் பகுதியில் தோல்வி கண்ட அரசியல் தலைவர்கள் அங்கே ஒரு முரண்பாட்டை ஏற்படுத்த முனைகிறார்கள். நாங்கள் காணி உரிமையாளர்கள், பிக்குமார்கள் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவோம். இந்த பிரச்சினையை தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்க போதாது. சட்டங்களை புதிதாக உருவாக்கியாவது இனவாதத்தை களைவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும். தமிழ் பேசும் திறமையானவர்களை இலங்கை கிரிக்கெட் அணியில் இணைக்க வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து இருந்து அந்த இடத்தில் விளையாடும் இலங்கை அணியை ஊக்குவிக்க வேண்டும். அதனை நாம் ஏற்படுத்துவோம்.

யாழில் நூலகத்தை எரித்தார்கள். உலகில் எங்கும் அப்படி நடக்கவில்லை. நாங்கள் அதற்கு பல கோடிகள் ஒதுக்கியுள்ளோம். 2000 பொலிஸாருக்கு வெற்றிடங்கள் உள்ளன. அதில் தமிழ் மொழி பேசும் பொலிஸாரை அதிகமாக உள்வாங்க உள்ளோம். குறைந்தது 500 பேராவது தமிழ் பேசுபவர்கள் இணைய வேண்டும்.

ஆனால் பொலிஸ் சேவையில் இணைய தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பெரிதாக விருப்பம் இல்லை. ஆனால் அது நல்ல தொழில் தானே. நீதியுடன் தொடர்புடையது. நல்ல சம்பளம் வரும். எனவே தமிழ் இளைஞர், யுவதிகள் அதில் இணைய வேண்டும். நாடு பூராகவும் 30 ஆயிரம் பேருக்கு அரச நியமனங்களை வழங்கவுள்ளோம். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும.

ஜனாதிபதித் தேர்தலை விட பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை மக்கள் எமக்கு வழங்கினார்கள். தற்போது உள்ளூராட்சி சபைகளை சுத்தம் செய்ய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-8-250)


பாராட்டி வாழ்த்துகிறோம்




வடமாகாண யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி **பொறியியலாளர்** நியமனம் கிடைக்கப்பெற்று மத்திய சுகாதார அமைச்சில் இன்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்கும்

திரு.

**இராசரத்தினம் சுசந்தன்**

அவர்கள் மேன்மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று இன்று போல் என்றும் உன்னத சேவையாற்றிட அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

(4046)



உங்கள் வாழ்வின் தங்கமான தருணங்களை எம் பாரம்பரியங்கள் மாறிடாமல் அடுத்த சந்ததியிடம் கையளிக்க, தங்க நகை உலகின் தார்மீகம்... உங்கள்...

**மயூரன்ஸ் நகை மாளிகை**

30.04.2025

அட்ஷய திருதியை முன்னிட்டு



எம்மிடம் நகைகளைக் கொள்வனவு செய்து விலைக் கழிவுகளையும், பெறுமதிமிக்க பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

(நி-2828)

021 222 3015

077 651 0251

இல.07, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்க நடை போட்ட ஹோலி, குர்ணால் சிகரம் தொட்டது பெங்களூரு

## டில்லியை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் முதலிடம்



குர்ணால், ஹோலி அரைச் சதம் கடந்து கைகொடுக்க பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டில்லி, அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் டில்லி - பெங்களூரு அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரு அணியின் தலைவர் ரஜத் படிதர், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**ராகுல் ஆறுதல்:**

டில்லி அணிக்கு அபிஷேக் போரெல் (28), டுபிளசி (22) ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. கருண் நாயர் (4) ஏமாற்றினார். அணித் தலைவர் அக்சர் படேல் (15) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய ராகுல் (41) ஆறுதல் கொடுத்தார். புவனேஷ்வர் குமார் "வேகத்தில்" அசுதோஷ் சர்மா (2) வெளியேறினார். ஹேசல்வுட் வீசிய 18வது ஓவரில் 2 பவுண்டரிகள் விரட்டிய டிரிஸ்டன் ஸ்டப்ஸ், யாஷ் தயாள் வீசிய 19வது ஓவரில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் விளாசினார். விப்ராஜ் நிகம் (12) "ரன்-அவுட்" ஆனார். புவனேஷ்வர் வீசிய கடைசி ஓவரில் ஸ்டப்ஸ் (34) ஆட்டமிழந்தார்.

**குர்ணால் அபாரம்:**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பெங்களூரு அணிக்கு ஜேக்கப் பெத்தேல் (12), தேவ்தத் படிக்கல் (0), அணித் தலைவர் ரஜத் படிதர் (2) ஏமாற்றினர். பெங்களூரு அணி 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை இழந்து திணறியது. பின் இணைந்த விராத் ஹோலி, குர்ணால் பாண்ட்யா ஜோடி கைகொடுத்தது. துஷ்மந்தா சமீர, முகேஷ் குமார், குல்தீப் யாதவ் பந்தில் சிக்சர் விளாசிய குர்ணால், அக்சர் படேல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி 38 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் அசத்திய ஹோலி, 45 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். நான்காவது விக்கெட்டுக்காக 119 ஓட்டங்கள் சேர்த்த போது துஷ்மந்தா சமீர பந்தில் ஹோலி (51) ஆட்டமிழந்தார். முகேஷ் வீசிய 19வது ஓவரில் ஒரு சிக்சர், 3 பவுண்டரி விளாசிய ரிம் டேவிட் வெற்றியை உறுதி செய்தார். பெங்களூரு அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற் றது. குர்ணால் (73 ஓட்., 4 சிக்சர், 5 பவுண்டரி), ரிம் டேவிட் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

(ந-7)





# INVITATION FOR BID 2025/02
# DELFT PRADESHIYA SABHA NORTHERN PROVINCE

1. **The Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade menti oned in the table below.**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03)**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further infor mation from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-04-28 To 2025-05-14** during **09:00 hrs and 14:00 Hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interes ted bidders on the submission of a written application to the **Secretary, Delft Pradeshiya Sabha (T.P:021 221 5211, e.mail: tsecretary delft@yahoo.com) from 9:00 hrs to 14:00 Hrs. during the period stated in table below** upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | from 2025-04-28 To 2025-05-14 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-05-05 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2025-05-14 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(7)/2/PSDG/2025/03 | Renovation of Thoongalai Road (Stage-II) | 8.47 | 84 | C8 or Above (Highway) | 3000.00 | 85000.00 | 27.08.2025 | 30.07.2025 |

**Chairman, Local Authority Procurement Committee,Delft Pradeshiya Sabha.** 28-04-2025

(C-2830)




**புவனேஷ்வர் "193"**

மூன்று விக்கெட் வீழ்த்திய பெங்களூரு வேகப்பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமார், இந்தியன் பிரீமியர் லீக் அரங்கில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் பியுஸ் சாவ்லாவை (192 விக்கெட், 192 போட்டி) முந்தி 2வது இடம் பிடித்தார். இதுவரை 185 போட்டிகளில், 193 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். முதலிடத்தில் யுவேந்திர சகால் (214 விக்கெட், 169 போட்டி) உள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலராக கடமையாற்றி அண் மையில் இறைபதமடைந்த திருமதி. சதீஸ் தமிழினியின் 75 ஆவது நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9மணி தொடக்கம் மதியம் 1மணி வரை இடம்பெறவுள் ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-8-30)

## மரண அறிவித்தல்



தோற்றம் 30.11.1962

மறைவு 26.04.2025

அமரர்.

### இந்திராணி

கண்டாவளையைப் பிறப்பிட மாகவும் தற்போது வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட அமரர்.இந்திராணி அவர்கள் 26.04.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளாகிய செல்லத்துரை- தேவகுஞ்சரி தம்பதியினரின் அன்பு மகளும், இந்துளா, இளங்குமரன் ஆகி யோரின் பாசமிகு தாயாரும், சிறீஸ்கரன், விதுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், வினுதரூஞ்சன், கவின், கிருதிக், இனியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விந்தன், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயலலிதா, அம்பியபாலன், விஜயலலிதா, காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் ஜெயவதனா, ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்

அனுசியா, தெய்வநாயகி, குலேந்திரன், விஜயலீலா, நவரட்ணா காலஞ்சென்ற ஜெயமகேஷ் மற்றும் முரளிதரன்,ஆலிக்,பிரவீனா, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகந்தினியின் உடன்பிறவா சகோதரியும்,பிரதீபா, மதுமிதா, சோபிகா, பிரசேனன், விவேகா, பிரகோபன், அக்சயா ஆகியோரின் பாசமிகு அத்தையும், ஜலவன், மிதுலவன், கோபிந்திரன், யதுஷா, திராவிடன், தத்துவன், சங்கமன், ஆதிரா, நவோதி, துலங்கமன், ஆத்திக்கா, அருநிலா, சபிரு, கசன், தட்சாயினி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்போது வசித்துவரும் வேப் பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது மகளின் வீட்டில் 28.04.2025 இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 3 மணியளவில் கிளிநொச்சி கண்டாவளை, வெளிக்கண்டல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வேப்பங்குளம்,
வவுனியா.

தகவல்- குடும்பத்தினர்
077 080 7895

(சி-2327)

## அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து

# வெளியேறுவது ஆபத்தானது

### அரசை எச்சரித்த ரணில் தரப்பு

(கொழும்பு)

**அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையி லிருந்து வெளியேறி தற்போதைய அரசாங்கம் பக்கச்சார்பான கொள்கையையே பின்பற்றுகி றது. துரதிஷ்டவசமாக இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் அறிவிக்கப்பட்டால் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக எண்ணக்கூடிய நிலைமை கூட ஏற்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொல வத்த தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிராந்திய நாடுகளுக்கிடையில் யுத்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் அது இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இந்தியா. பாகிஸ்தானுக்கிடையில் யுத்த நிலைமை ஏற்பட்ட போது சிறி மாவோ பண்டாரநாயக்க குமார துங்க போன்ற அரச தலைவர்கள் அமைதியை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக் கின்றனர்.

இந்தியாவுடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் என்ன என்பது நாட்டுக்கு தெரியாது. அன்று இந்திய எதிர்ப்பு கொள்கை யால் நாட்டில் வன்முறையை ஏற்படுத்திய ஜே.வி.பி. இன்று இரகசிய ஒப்பந்தங்களில் கையை முத்திடுகின்றது.

இவ்வாறு எம்மால் ஒருதலைப் பட்சமாக செயற்பட முடியாது.

பாகிஸ்தானும் எமது முன்னெ டுப்புக்களை அவதானிக்கிறது. பக்கசார்பாக செயற்பட்டால் பிராந் தியத்தில் மோதல்கள் ஏற்படுமே தவிர அமைதியை ஏற்படுத்த முடி யாது.

துரதிஷ்டவசமாக இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் அறிவிக்கப் பட்டால் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக எண்ணக்கூடிய நிலைமை கூட ஏற்படலாம். கார ணம் அரசாங்கம் பல்வேறு முக்கிய விடயங்களை மறைத்து வைத்தி ருக்கிறது எனத் தெரிவித்தார். (நி-8)

# இராசிபலன்

28. 04.2025
சித்திரை 15, திங்கட்கிழமை
பிரதமை முன்னிரவு 11.12 மணிவரை
பரணி முன்னிரவு 11.31மணிவரை

சுப நேரம் 11.58 -1.28 மணிவரை
இராகு காலம் 7.28-8.58 மணிவரை
சித்திரைப் பரணி

சந்திராஷ்டமம் -
அத்தம், சித்திரை

வளவன்




சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்புஇடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.




எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சாமர்த்தியமாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள்.




ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், மனதில் இனம் புரியாத மனக் கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.




பிற இனத்தவரால் பெருமை வந்து சேரலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.




உறவினர் வழியில் அன்புத்தொல்லைகள் ஏற்படலாம், எதிர் பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.




வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்களினால் பலனுண்டு விருந்துக ளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், போசன சுகமுண்டு.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ' பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள். செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**செல்போனை அடிக்கடி உபயோகித்தால் மூளை மற்றும் காதுக் கோளாறு போன்றவை ஏற்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி அதிகார சபைகள் கூட

## எம் கையில் இல்லாவிட்டால் நிலைமை மோசமாகும்

### முன்னாள் எம்.பி.சுமந்திரன்



(சாவகச்சேரி)

உள்ளூர் அதிகாரசபைகளைக்கூட எம்முடைய கைகளில் வைத்திருக்காவிட்டால் தமிழ் மக்களுடைய நீண்ட அரசியல் நிலைமை மாறி விட்டதாகச் சொல்லப்படும். ஆனால் அதில் ஒருபோதும் மாற்றம் கிடையாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும்-முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

கடந்த இரண்டு தேர்தல்கள் ஊடாக இந்த நாட்டில் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பது உண்மை. என்றுமே இல்லாத வாறு இடதுசாரியினர் என்று கூறும் கட்சியினர் நாட்டின் ஆட்சியைப் பிடித்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத்தில் 3பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் இந்தப் பாராளுமன்றத்தில் 159 உறுப்பினர்களாக அதிகரித்துள்ளனர். தமிழர் பிரதேசங்களிலும் ஓரளவிற்கு மக்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளனர்.

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் தோல்வியடைந்திருந்தார். இலங்கை தமிழரசுக் கட்சி யாருக்கு ஆதரவளித்திருந்ததோ அவரே வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் வெற்றி பெற்றார்.

அநுரகுமார திஸாநாயக்க 42 சதவிகிதத்துடன் ஜனாதிபதியாக வந்தவுடனே அவருக்கே பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொடுப்போம் என்று நாட்டு மக்கள் தீர்மானித்து அதனையும் அவரிடமே கொடுத்துள்ளனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் 25சதவீதமான வாக்குகள் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

அதன் விளைவாக அவர்களுக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். அதனால் அவர்கள் தமிழ் மக்கள் தமக்கே ஆணை தந்திருப்பதாகவும், தமிழ் மக்களுக் கான அரசியல் தீர்வு என்ன வென்பதனை தாமே தீர்மா னிக்க வேண்டும் எனவும் கூறி வருகின்றனர்.

இது மிகவும் ஆபத்தான ஒரு விடயம். இலங்கை வாழ் தமிழ் மக்களாகிய நாம் 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து எங்களுடைய அரசியல் நிலைப்பாடு என்னவென்பதனை தெட்டத் தெளிவாக சொல்லி வந்திருக்கிறோம்.

சமஷ்டிக்கு குறைவான எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டதில்லை.

தற்போது கூட இலங்கை தமிழரசுக்கட்சி தான் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி. வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் தமிழரசுக்கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுடைய ஆதரவைச் சுமந்து நிற்கின்றது.

வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக இலங்கைத் தமிழ் மக்களுடைய சமஷ்டித் தீர்வு என்ற அரசியல் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்ற செய்தியை அடித்துச் சொல்ல வேண்டும். நாடு எவருடனும் இருக்கட்டும் ஆனால் எம் ஊர் எம் வீட்டோடு இருக்கட்டும் . அதில் மாற்றம் இல்லை. என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-8-30)

# வெப்பநிலையைப் பேணாது

## யோக்கட்டுக்கள் விநியோகம்

### வாகன சாரதிக்கு ரூ.30 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

உரிய வெப்பநிலையைப் பேணாது யோக்கட்டுகளை வாகனத்தில் எடுத்துச் சென்ற சாரதிக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்று 30ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன், கைப்பற்றப்பட்ட யோக்கட்களையும் அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

யோக்கட்களை 6 செல்சியஸ் வெப்பநிலையில் கூலர் வாகனத்தில் எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் அதன் வெப்பநிலையை அதிகரித்து 18 செல்சியஸ் வெப்ப நிலையில் கடைகளுக்கு விநியோகிக்க கொண்டு சென்ற வாகன சாரதிக்கு எதிராக அராலி பொதுச் சுகாதார பரிசோதகர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, சாரதி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து சாரதியைக் கடுமையாக எச்சரித்த மன்று 30 ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிட்டதுடன் , கைப்பற்றப்பட்ட யோக்கட் கப்கள் அடங்கிய 200 பக்கெட்களையும் அழிக்குமாறும் உத்தரவிட்டது. (6-8-33)

# வட்டுக்கோட்டை-அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமியாரின் மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

மகோற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெற்று 14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்

## மன்னார் விஜயத்தில் சுகாதார அமைச்சர்



(மன்னார்)

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமென சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் குறைபாடுகள் தொடர்பில் அறிந்து கொள்ள மன்னாரிற்கு விசேட கண்காணிப்பு விஜயத்தினை நேற்று முன்தினம் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ மேற்கொண்டிருந்தார்

இதன்போது, மன்னார் மாவட்ட வைத்தியசாலை, அடம்பன், [illegible]காலை, முருங்கன் உள்ளிட்ட பிரதேச வைத்தியசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் [illegible]டியாக வைத்தியசாலைகளின் வளப்பற்றாக் குறை மற்றும் வைத்தியர் பற்றாகுறைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

விரைவில் இங்கு காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான துரித நடவடிக்கை எடுப்பதாகவும் சுற்றுலாத்துறையையும் இங்கு விருத்தி செய்து நாடு முழுவதும் சிறந்த சுகாதார சேவையை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார். (6-8-285)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 | 300 |
| தக்காளி | 800 | 700 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 280 | 200 |
| கோவா | 350 | 300 | 320 | 400 |
| கரட் | 600 | 650 | 500 | 600 |
| பூசணி | 180 | 150 | 160 | 250 |
| புடோல் | 250 | 200 | 250 | 320 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 110 | 120 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 | 450 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 200 | 320 |
| பயற்றங்காய் | 200 | 200 | 300 | 400 |
| லீக்ஸ் | 280 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 600 | 400 | 400 | 600 |
| கறிமிளகாய் | 500 | 450 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 1000-1800 | 2400 |
| போஞ்சி | 650 | 650 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 200 | 120-200 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 600 | -- | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 150 | 120 | 320 |
| பொன்னாங்காணி | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 80 | 80 | 80 |
| [illegible] | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் வெள்ளத்தில் விவசாய நிலங்கள்

(நுவரெலியா)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாக கடுமையான மழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ள நீர் பரவலால் பிரதான வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளது.

அந்தவகையில், நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் மழை காரணமாக நுவரெலியா கந்தப்பளை - ஹைபொரஸ்ட் இலக்கம் 3 பகுதியில் ஏற்பட்ட வெள்ள நீர் பரவலால் பிரதான வீதிகள் மற்றும் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா - கந்தப்பளை - ஹைபொரஸ்ட் இலக்கம் 3 பகுதியில் தாழ்நிலப் பகுதிகளில் மழைநீர் தேங்கி காணப்பட்டதன் காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்களில் போக்குவரத்தும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகமான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-8)

# தவறி வீழ்ந்து உயிரிழந்த மாணவன்

(கொழும்பு)

காலி கோட்டை சுவரிலிருந்து ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

21 வயதுடைய மாணவனே இச் சம்பவத்தில் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மாணவன், ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பயிலும் தனது நண்பர்களுடன் காலி கோட்டையைப் பார்வையிடச் சென்ற போதே கோட்டை சுவரிலிருந்து கீழே தவறி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த மாணவன், பொலிஸ் அதிகாரிகளால் கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# புலமைப்பரிசில் பரீட்சை முற்றாக ஒழிக்கப்படும்

## அநுர தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

ஐந்து வருடங்களில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முற்றாக ஒழிக்கப்படும் என அநுர தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

உலகத்தில் உள்ள மிக மோசமான பரீட்சை ஐந்தாம் தரப் புலமை பரிசில் பரீட்சை என்றும் அவர்கள் விமர்சித்துள்ளனர்.

குறித்த விடயங்களை தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பத்ம குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், புலமைப்பரிசில் பரீட்சையை தடை செய்யாததால் வசதி வாய்ப்புகள் உள்ள பாடசாலைகளுக்கு பின் தங்கிய பாடசாலை மாணவர்கள் செல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது.

எதிர்காலத்தில் பின் தங்கிய பாடசாலைகள் இல்லாமல் செய்யப்பட்டு அனைத்து பாடசாலைகளுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எதிர்வரும் ஐந்து வருடங்களில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முற்றாக இல்லாதொழிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பத்ம குமார தெரிவித்துள்ளார். (நி-8)


# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம்-யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 29.02.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.05.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் 28.05.2025 மற்றும் 29.05.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, யாழ் / பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் வல்வெட்டித்துறை, |
| சேவை நிலையங்கள | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

(சி-2826)

www.peopleslank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

AA+ (lka) Fitch Rating . AAA - Brand Finance Rating

PEOPLE'S BANK
The Bank of the People



# INVITATION FOR BIDS (IFB)

# IFB No : 2025/01

## VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The **Chairman, Department Procurement Committee,** on behalf of the Velanai Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below** in 6 and inspect the Procurement documents at the same place on any working days from **2025-04-28 To 2025-05-11** during **09:00 hrs and 15:00 hrs**.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall,** Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-04.28 To 2025-05-11 | | | | |
| | Pre-Bid Conference | | | At 11.00 A.M on 2025-05-06 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2025-05-12 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18) /02/CF/2024/02 | Costruction of Veerapaththirar Kovil Veethy at mandaitivu | 1.016 | 63 | C9 or above in Highway Construction | 1500.00 | 10,160.00 | 28 – 07 - 2025 | 30 – June-2025 |
| NP/14/41(18) /02/CF/2024/02 | Contruction of Allaippiddy Juvaniar church road | 1.016 | 63 | C9 or above in Highway Construction | 1500.00 | 10,160.00 | 28 – 07 - 2025 | 30 – June-2025 |
| NP/14/41(18) /02/PSDG(01)/2025 | Construction of Kerativu Hindu cemetery | 0.817 | 63 | C9 or above in Building Construction | 1500.00 | 8,170.00 | 28 – 07 - 2025 | 30 – June-2025 |

**Chairman,**
**Divisional Procurement Committee(DPC)**
**Velanai Pradeshiya Sabha Vangalavady junction, Velanai .** 28.04.2025


(c-2825)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியா-பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்யத் தயார்!

## ஈரான் அறிவிப்பு



(டெஹ்ரான்)

**இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றத்தைத் தணிக்க மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் உள்ள பிரபல சுற்றுலாத் தளத்தில் கடந்த 22ஆம் திகதி லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான The Resistance Front (TRF) நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக்கொல்லப் பட்டனர். குறித்த தாக்குதல் சம்பவம் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூழும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இது தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சர் சயீது அப்பாஸ் அராச்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் "இந்தியாவும், பாகிஸ்தானும் தமது சகோதர நாடுகள் எனவும், இரு நாடுகளுக்கு இடையேயும் நூற்றாண்டு பழைமையான கலாசாரம் மற்றும் நாகரிக உறவுகள் உள்ளதாகவும் , மற்ற நட்பு நாடுகளைப் போல அவர்களுக்கும் தாம் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த இக்கட்டான நேரத்தில், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தைத் தணிப்பதற்கு இரு நாடுகள் இடையே மத்தியஸ்தம் செய்ய ஈரான் தயாராக இருப்பதாகவும்" அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் திருவுடல் நல்லடக்கம்





(வத்திக்கான்)

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் திருவுடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் ஏப்ரல் 21ஆம் திகதி வத்திக்கானில் உள்ள தனது இல்லத்தில் 88 ஆவது வயதில் நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் நல்லடக்க ஆராதனை இத்தாலியின் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வத்திக்கானில் சந்தித்துக் கொண்ட ட்ரம்ப்-ஜெலன்ஸ்கி

### வைரலாகும் புகைப்படம்

(வத்திக்கான்)

நித்திய இளைப்பாறிய புனித பாப்பரசர் பிரான்சிஸின் இறுதி ஆராதனை நிகழ்வு வத்திக்கானிலுள்ள புனித பீட்டர்ஸ் பெசிலிக்கா தேவாலயத்தின் திறந்தவெளி முற்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பிரித்தானிய இளவரசர் வில்லியம்ஸ், உக்ரைன் ஜனாதிபதி வோலாடிமிர் ஜெலன்ஸ்கி உட்பட பல உலகத் தலைவர்கள் வத்திகானுக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் பிரான்சிஸ் திருத்தந்தையின் நல்லடக்க ஆராதனைகளைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் உக்ரைன் ஜனாதிபதி வோலாடிமிர் ஜெலன்ஸ்கியும் நேற்று விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பான புகைப்படம் தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த ஆறு பாயும்!

## இந்தியாவை மிரட்டும் பாகிஸ்தான்

**(இஸ்லாமாபாத்)**

**சிந்து நதி எங்களுடையது. அது எங்களுடையதாகவே இருக்கும் என்று நான் இந்தியாவிடம் சொல்ல விரும்புகிறேன். ஒன்று எங்கள் தண்ணீர் அதன் வழியாகப் பாயும், அல்லது அவர்களின்(இந்தியா) ரத்த ஆறு ஓடும்.**



பஹல்காம் தாக்குதலுக்கு பாகிஸ்தானை இந்தியா பலிக்கடா ஆக்குகிறது. இதன் மூலம் அதன் உள்நாட்டுப் பாதுகாப்பு குறைபாடுகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்ப முயல்கிறது என பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பீலாவல் பூட்டோ தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தில் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அதனால் பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்தது.

இந்நிலையில் பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரபூர்வ உத்தரவை இந்தியா பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஈரான் துறைமுகத்தில் வெடிவிபத்து!

- ❖14 பேர் உயிரிழப்பு
- ❖700 இற்கும் மேற்பட்டோர் காயம்





(டெஹ்ரான்)

ஈரான் நாட்டின் தென்பகுதியில் உள்ள துறைமுகத்தில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில், 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 700 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

மேற்காசிய நாடான ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள பந்தர் அப்பாஸ் நகருக்கு அருகே உள்ளது ராஜேய் துறைமுகம். பாரசீக வளைகுடாவில் உள்ள ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள இந்தத் துறைமுகம் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும், 8 கோடி தொன் அளவுக்கு பொருட்கள் கையாளப்படுகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்தத் துறைமுகத்தில் இருந்த கன்டெய்னரில் இருந்து திடீரென மர்மப்பொருள் வெடித்துச் சிதறியது. இதனால் அப்பகுதி முழுதும் கரும்புகை ஏற்பட்டது.

பல கிலோமீற்றர் தொலைவுக்கு இதன் அதிர்வு உணரப்பட்டது. வெடி விபத்தைத் தொடர்ந்து துறை முகத்தில் இருந்தவர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

வெடி விபத்துக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை. இதனால் விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணைகள் நடந்து வருகின்றன. (நி-8)



# நடுநிலையான விசாரணைக்கு பாகிஸ்தான் தயார்

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் உள்ள பிரபல சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான The Resistance Front (TRF) நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூளும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது.



இந்நிலையில் இப் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து, நடுநிலையான விசாரணைக்குத் தாம் தயாராக உள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெஹபாஸ் ஷெரீஃப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது பஹல்காமில் நடந்த துயரச் சம்பவம் பழி சுமத்தும் மற்றொரு உதாரணமாகும்.


இவ்வாறான விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டும்.

எந்தவொரு நடுநிலையான, வெளிப்படையான, நம்பகமான விசாரணைகளிலும் பங்கேற்க பாகிஸ்தான் தயாராக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022

04



வாழ்நாள் பேராசிரியர்.பொன்.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.

கிளிநொச்சி மாவட்டம் 1205 சதுர கிலோமீற்றர் நிலப்பரப் பளவைக் கொண்டிருப்பதுடன், மிகவும் குறைவான குடித்தொகை கொண்ட மாவட்டமாக இருக்கின்றது. இம்மாவட்டத்தில் 1871 தொடக்கம் 1946இற்கும் இடைப்பட்ட காலத்தில் குடிசனத் தொகையில் சிறிய மாற்றங்களே ஏற்பட்டுள்ளன. இம் மாவட்டத்திலுள்ள புராதன கிராமங்கள் குடித்தொகை வளர்ச்சியைப் பெறவில்லை. மலேரியா நோயின் தாக்கமும் வறுமையும் உயர்வான இறப்பு வீதத்தை ஏற்படுத்தின. 1940களின் பிற்பகுதியில் இருந்து முன்னெடுக்கப்பட்ட நிலக் குடியேற்றத் திட்டங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் குடியேற்றப்பட்டார்கள்.

குடியேற்றவாசிகளுக்கு நீர்ப்பாசன வசதியுடைய நெற்காணிகளும், குடியிருப்பு மேட்டுக் காணிகளும் வழங்கப்பட்டன. மேலும் 1940களில் பிரதேசத்தில் நிலவிய மலேரியாத் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டதால் குடியுள் வருகை அதிகரித்தது. மேலும் இரணைமடு, அக்கராயன், கல்மடு, வன்னேரிக்குளம், கரியாலை போன்ற பல நீர்ப்பாசன நிலக் குடியேற்றங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையான குடியேற்றவாசிகள் மாவட்டத்தில் குடியேற்றப்பட்டனர்.

நாட்டில் 1956, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குறிப்பாக மலையகத் தமிழர்களும் அநுராதபுரத் தமிழர்களும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அகதிகளாக வந்து குடியேறினர். மேலும் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து பலர் புதுவாழ்வு தேடி கிளிநொச்சிக்குப் படிப்படியாகக் குடியேறினர். 1995 இல் ஏற்பட்ட வலிகாமம் இடப்பெயர்வில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்து 2002 சமாதான உடன் படிக்கைக் காலத்தில் யாழ்ப்பாணப்பகுதிகளுக்கு மீளவும் திரும்பினர்.

2001 ஆம் ஆண்டு குடித்தொகை விபரம் தற்காலிக குடியேற்றத்தைக் காட்டி நிற்கின்றது. இன்றைய கிளிநொச்சி மாவட்டப் பகுதியும் துணுக்காய்ப் பிரதேசமும் 1960இற்கு முன்னர் சாவகச்சேரி பாராளுமன்றத் தொகுதிக்குள் இருந்தன. 1959ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பின் விளைவாக கிளிநொச்சிப் பாராளுமன்றத் தொகுதி உருவாக்கப்பட்டது.

இத்தொகுதி உருவாக்கத்தின்பின் மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன. இக்காலப் பகுதியில் கிளிநொச்சி நகரத்தின் வளர்ச்சியும் துரிதமாகியது. மேலும் கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலைகள், பல்கலைக்கழக விவசாய, பொறியியல், தொழில்நுட்ப பீடங்கள், மத்திய வங்கிக்கிளை மேலும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் போன்றன நகர வளர்சசிக்குப் பெரும் உதவியாக அமைந்தன. மன்னார் - பூநகரி - யாழ்ப்பாணம் A35 வீதி சிறப்பாக அமைக்கப்பட்டதால் பூநகரி வளர்ச்சிப் போக்கைக் கொண்டுள்ளது. பூநகரி வாடியடியும் முழங்காவிலும் இன்று சிறு நகர்களாக வளர்ந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டக் குடித்தொகை வளர்ச்சி யாழ்ப்பாண மாவட்டக் குடித்தொகை வளர்ச்சியிலும் உயர்வாக இருக்கிறது.

| குடிக்கணிப்பு ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடை வேறுபாடு | | மாகாணக் குடித்தொகையில் மாவட்டத்தின் பங்கு |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 7592 | ...... | ....... | 2.7 |
| 1881 | 8159 | +567 | 7.5 | 2.4 |
| 1891 | 7331 | -728 | -8.9 | 2.3 |
| 1901 | 7835 | +504 | +6.9 | 2.3 |
| 1911 | 9172 | +1337 | 17.0 | 2.2 |
| 1921 | 9857 | +685 | +7.5 | 2.2 |
| 1931 | 9656 | _201 | +2.0 | 2.2 |
| 1946 | 13631 | +3975 | +41.2 | 2.2 |
| 1953 | 20203 | +6572 | +48.2 | 3.5 |
| 1963 | 42346 | +22143 | +109.6 | 5.7 |
| 1971 | 60605 | +18259 | +45.1 | 6.2 |
| 1981 | 95904 | +35299 | +58.2 | 8.6 |
| 2001 | 155000 | +59056 | +61.6 | 15.3 |
| 2012 | 171511 | +16511 | +10.7 | 16.2 |
| 2022 | 195605 | +24094 | +14.0 | 16.6 |

**அட்டவணை VI மன்னார் மாவட்டத்தின் குடித்தொகை, குடிக்கணிப்பு இடையிலான வேறுபாடுகள் 1871 - 2022.**

இம்மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பு 18 சதுர கிலோமீற்றராக இருக்கும் பொழுதும் குடித்தொகை குறைவாக இருக்கிறது. இம் மாவட்டத்தின் குடித்தொகையில் 1871 தொடக்கம் 1946இற்கிடைப்பட்ட காலத்தில் பெரு வேறுபாடு காணப்படவில்லை. 1946 தொடக்கம் 1981 இற்கு இடைப்பட்ட 35 ஆண்டுகளில் மாவட்டத்தின் குடித்தொகை 75055 பேரால் அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி வீதம் 241 ஆக இருக்கிறது. புதியநிலக் குடியேற்றத்திட்டங்கள் மற்றும் இறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி உயர்வான வளர்ச்சிக்குக் காரணங்களாகும்.

| குடிக்கணிப்பு ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடை வேறுபாடு | | மாகாணக் குடித்தொகையில் மாவட்டத்தின் பங்கு |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 19958 | | | 7.1 |
| 1881 | 20448 | +490 | +2.5 | 7.0 |
| 1891 | 24051 | +3603 | +17.6 | 7.5 |
| 1901 | 24476 | +425 | +1.8 | 7.2 |
| 1911 | 25166 | +690 | +2.8 | 6.8 |
| 1921 | 25207 | -44 | -0.2 | 6.7 |
| 1931 | 24325 | -882 | -3.5 | 6.1 |
| 1946 | 31180 | +6858 | +28.2 | 6.5 |
| 1953 | 43300 | +12126 | +38.9 | 7.2 |
| 1963 | 58215 | +9915 | +22.9 | 7.8 |
| 1971 | 74227 | +21012 | +36.1 | 8.5 |
| 1981 | 106235 | +32008 | +43.1 | 8.6 |
| 2001 | 92118 | -14117 | -13.3 | 9.1 |
| 2012 | 99051 | _6933 | +7.5 | 9.4 |
| 2022 | 115191 | +16140 | 16.3 | 9.8 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள், மாவட்டப் புள்ளிவிபரக் கைந்நூல்கள்

1990இல் இம் மாவட்டத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அரசியல் நெருக்கடியால் கட்டாய இடமாற்றத்திற்குட்பட்ட பொழுதும் வாழ்ந்த மாவட்டங்களில் மன்னார் மாவட்டப் பதிவுகளுடன் தற்காலிகமாக வாழ்ந்தனர். தற்பொழுது இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலானோர் மாவட்டத்திற்குத் திரும்பி விட்டனர்.

1980, 1990களில் யுத்த நிலைமைகள் காரணமாக மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் தமிழ் நாட்டுக்கு இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நீண்ட காலம் அங்கு வாழ்ந்து வருவதாலும் இங்கு அவர்கள் நல்ல புது வாழ்வைப் பெறுவது கடினம் என்ற நிலையாலும் தொடர்ந்து தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் முழுமையாக மீள் குடியேற்றம் பெற்ற பின்பு மாவட்டக் குடித்தொகை ஸ்திரத்தன்மை பெறும்.

**அட்டவணை VII வவுனியா மாவட்டத்தின் குடித்தொகை, குடிக் கணிப்பு இடையிலான வேறுபாடுகள் 1871 - 2022**

இம்மாவட்டம் 1881 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டது. 1871 தொடக்கம் 1946 இற்கு இடைப்பட்ட 75 வருடத்தில் இம் மாவட்டத்தின் குடித்தொகை 6039 பேரால் (79.5%) அதிகரித்துள்ளது. 1946 இற்குப் பின்னர் உணவுப் பாதுகாப்பிலும், மருத்துவத்துறையிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களாலும் 1950, 1960களில் மாவட்டக் குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டதாலும் குடித்தொகை அதிகரிக்கலாயிற்று. 1956, 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கைப் பகுதியில் இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட, குறிப்பாக மலையகத் தமிழர்கள் பலர் வவுனியா மாவட்டத்திற்கு இடம்பெயரத் தொடங்கினர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025-12.11.2026 வரை



இது வரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் 26.4. 2025 அன்று 11 ஆம் இடமான லாபஸ் தானத்திற்கு வருகிறார் அதேநேரத்தில் கேது பகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அந்த இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திர பாதசார பலன் களுக்கேற்ப பலன்களை வழாங்குவார்கள்.

## ராகு வரும் இடம் லாப ஸ்தானம் நாளும் இனி உயரும் வருமானம்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

உங்கள் இராசிக்கு லாபஸ் தானத்திற்கு ராகு வரும்பொழுது பொருளாதாரம் மேம்படும். தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவார். வாடகை கட்டடத்தில் நடைபெற்று வரும் தொழிலை சொந்த கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு ஒத்து ழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு தானாக வந்து சேரும்.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். அண்ணன் தம்பிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும், பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டு புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் கைகூடும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

### குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குருசாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். வீடுமாற்றம், இடமாற்றம் ஆகியவை நினைத்தது போல நடை பெறும். வாகன யோகம் உண்டு. வெளிநாட்டில் இருந்து உத்தியோகம் சம்பந்தமான அழைப்புகள் வரலாம். முன்னோர்கள் கட்டிவைத்து சிதிலமடைந்த கோவில்களை, இப் பொழுது மீண்டும் திருப்பணி செய்து மகிழ்வீர்கள். பங்காளிப் பகை மாறும். தேங்கிக் கிடந்த பணிகளை சிறப்பாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

### சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் நேரத்தில் தொட்டது துலங்கும் தொழில் வளர்ச்சி பெருகும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. கௌரவம் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் செயற்பாடு, மேலதிகாரிகளை ஆச்சரியப்படுத்தும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

### செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வீடு கட்ட வேண்டும் அல்லது வீடு வாங்க வேண்டும் என்ற எண்ணம் கைகூடும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். புதிய வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. உடல் ஆரோக்கியத்தில் இருந்த தொல்லைகள் படிப்படியாக அகலும். கணவன் மனைவிக்குள் இருந்த சச்சரவுகள் அகலும் திரும்பி வராது என்று நினைத்த கடன், இப்பொழுது வசூலாகும்.

### சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)

உத்தரம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவோ கடல் தாண்டிச் சென்று பணிபுரிவது சம்பந்தமாகவோ எடுத்த புது முயற்சி பலன் தரும். பாதியில் நின்ற கட்டடப் பணியை மீதியும் தொடருவீர்கள். பணம் ஒருபுறம் வந்தாலும், மறுநிமிடம் அது செலவாகி மனக் கலக்கத்தை ஏற்படுத்தும். மருத்துவச் செலவும் உண்டு. பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறாது, உங்களிடமே திரும்பி வரக்கூடும். உத்தியோகத்தில் அரசு வேலைக்காக செய்த முயற்சியில்




தடை ஏற்படலாம்.

### சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)

பூரம் நடசத்திர காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப முன் னேற்றும் திருப்தியாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும். இல்லத்தில் மங்கல ஓசையும். மழலையின் ஓசையும் கேட் கும் ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும். உயர் அதிகாரிகளின் ஆதர வோடுகேட்ட சலுகைகளைப் பெறுவீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து, அதன் மூலம் வருமானம் வரும் நேரம் இது.

### சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11 2026 வரை)

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை அகலும். தொழில் மற்றும் வியாபாரத் தில் போட்டி கள் இருந்தாலும் அதை சமாளித்து வெற்றி காண்பீர்கள். குடும்ப ரகசியங்களை மூன்றாம் நபரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். நெருங்கிய உறவினர்கள் பகையாகாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தொழிலில் அகலக் கால் வைக்க வேண்டாம்.

### சனிப் பெயர்ச்சிக் காலம்

6.3.2026 அன்று சனி பகவான் மீன ராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். அப்பொழுது உங்களுக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. இது முதல் சுற்றா? இரண்டாவது சுற்றா?, மூன்றாவது சுற்றா? என்பதை சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப உங்களுக்கு பலன்கள் நடைபெறும் ஏழரைச் சனி என்றதும் பயப்பட வேண்டாம் தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதி சனி என்பதால் புதிய ஒப்பந்தங் கள் வந்து சேரும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். சில காரியங்க ளில் வெற்றி கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சி காலம்

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. வருகிற 11.5.2025 அன்று மிதுன இராசிக்கு குரு செல்கிறார். அப்போது சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகும். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் வாங்கல் சுமூகமாக இருக்கும். தந்தை வழி ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்டு வந்த பதவி உயர்வு இப்பொழுது தானாக கிடைக்கும்.

இடம், வீடு, வாகனம் வாங்க கடன் கேட்டு விண்ணப்பித்து இருந்தால் அது கிடைக்கப் பெறும். ஒக்டோபர் 8 ஆம் திகதி குருபகவான், கடக இராசிக்கு அதிசாரமாக பெயர்ச்சி ஆகிச் செல்கிறார். அதன் பார்வை பலத்தால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 758





கடம்பூர் கிராமத்தில் வாரம் ஒருநாள் நடைபெறும் சந்தையில் ஒருவேளை குதிரைகள் விற்பனைக்கு வரலாம். இல்லாவிடில் திருப்பாதிரிப்புலியூர் சென்று வாங்க வேண்டும். கடம்பூருக்குப் போவதா, வேண்டாமா என்பது பற்றி அந்த நண்பர்களுக்குள் விவாதம் நடந்தது. அதில் உள்ள சாதக பாதகங்களைப் பற்றி விவாதித்தார்கள். கடம்பூரில் ஆதித்த கரிகாலரின் வருகையைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்தாலும் கிடைக்கலாம். காஞ்சியிலிருந்து புறப்பட்டு விட்டாரா, எந்த வழியாக வருகிறார் என்று ஏதேனும் தகவல் தெரிந்தால் நல்லது அல்லவா? ஆனால் கடம்பூரில் தெரிந்தவர்களின் கண்ணில் படக் கூடாது. கந்தமாறனைச் சந்திக்க நேர்ந்து விட்டால் ஆபத்தாய்ப் போய் விடும். ஒருவேளை பழுவேட்டரையரின் பரிவாரங்கள் இதற்குள் வந்திருந்தால், அதுவும் தொல்லைதான்!

"வைஷ்ணவனே! உனக்குத்தான் இரவில் சுவர் ஏறிக் குதிக்கத் தெரியுமே? சம்புவரையர் குதிரை லாயத்திலிருந்து இரண்டு குதிரைகளைக் கொண்டு வந்து விடலாமே?" என்றான் வந்தியத்தேவன். "நான் சுவர் ஏறிக் குதிப்பேன். ஆனால் குதிரைகளுக்குச் சுவர் ஏறிக் குதிக்கத் தெரிய வேண்டுமே?" என்றான் வைஷ்ணவன்.

"பழுவூர்ப் பரிவாரங்கள் அங்கே வந்திருந்தால், இரண்டு குதிரைகளை அடித்துக் கொண்டு போகலாம். அவர்கள் முன்னொரு சமயம் கடம்பூரில் என்னுடைய குதிரையை விரட்டியடித்தார்கள் அல்லவா? அதற்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்றான் வாணர் குல வீரன்.


சில மாதங்களுக்கு முன்பு கடம்பூரில் அவர்கள் சந்தித்தது பற்றியும் அன்று இரவு நடந்த அபூர்வ சம்பவங்களைப் பற்றியும் வழி நெடுகப் பேசிக் கொண்டு வந்தார்கள். இருவரும் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்துக்குக் கடம்பூரை அடைந்தார்கள். கடம்பூர் அவர்கள் எதிர்பார்த்ததுபோல் அமர்க்களப் பட்டுக் கொண்டுதானிருந்தது. அரண்மனையும் கோட்டை வாசலும் கொடிகளாலும் தோரணங்களாலும் தொங்கல் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. கோட்டை வாசலிலும் சரி, மதில் சுவரைச் சுற்றியும் சரி, முன்னை விடக் காவல் பலமாக இருந்தது. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் வருகிறார் என்றால் கேட்க வேண்டுமா? அதே சமயத்தில் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரும் ராணியுடன் வரப் போகிறார். இரண்டு பேருடைய பரிவாரங்களும் வருவார்கள். சில நாளைக்கு ஊர் தடபுடல்பட்டுக் கொண்டுதானிருக்கும்.

இதையெல்லாம் பற்றிக் கடம்பூர்க் கடைத்தெருவில் ஜனங்கள் பேசிக் கொண்டிருந்ததை இரு நண்பர்களும் கேட்டார்கள். ஜனங்கள் பேச்சிலிருந்து இரு சாராரும் இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிந்தது. சம்புவரையர் மகன் கந்தமாறன் ஆதித்த கரிகாலரை அழைத்து வரக் காஞ்சிக்கே புறப்பட்டுப் போயிருக்கிறான் என்றும் தெரிந்தது. இந்தப் பரபரப்பான பேச்சுக்களுக்கிடையில் சிலர் 'கடல் கொண்டு விட்ட' இளவரசன் அருள்மொழிவர்மனைப் பற்றியும் மெல்லிய குரலில் பேசினார்கள். அவ்வளவு பெரிய துக்க சம்பவம் நடந்திருக்கும் போது இங்கே விருந்துகளுக்கும் களியாட்டங்களுக்கும் ஏற்பாடு நடந்து வருவது பலருக்குப் பிடிக்கவில்லை என்பது ஜாடை மாடையாக அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து தெரிந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கால் முளைத்த மீன்கள்



(26.04.2025 தொடர்ச்சி...)

அதைக் கண்ட சீடர்கள் "ஐயோ" என்று கத்திக் கொண்டு எகிறிக் குதித்தனர். அதனால் இன்னும் கொஞ்சம் ஆட்டம் கண்டது படகு. அதற்குள் படகு முழுவதும் நீர் நிரம்பி விடவே, படகு கடலுக்குள் மூழ்கியது. குருவும் சீடர்களும் அலறியபடி நீருக்குள் தத்தளித்தனர். அவர்கள் போட்ட சத்தத்தைக் கேட்டு, அங்கு வந்த சில மீனவர்கள் நீந்திச் சென்று அனைவரையும் காப்பாற்றினர்.

மடத்துக்கு வந்து சேர்ந்த சீடர்கள் "நம் படகு எப்படிக் கவிழ்ந்தது? என்று [illegible] னர். கடலும் மீன்களும் சேர்ந்து சதித் திட்டம் செய்து தான் நம் படகைக் கவிழ்த்து விட்டன என்றார் பரமார்த்தர். "அப்படியானால், எப்படியாவது கடலின் திமிரையும் மீன்களின் கொட்டத்தையும் அடக்க வேண்டும்" என்றான் மட்டி. குருவோ முடிந்தவரை மீன்களைப் பிடித்துக் கொன்று விடுவோம் என்றான் மடையன்.

"ஆமாம் சும்மா விடக் கூடாது. மறுபடியும் மீன் பிடிப்போம் வாருங்கள்" என்றான் மூடன். மறுநாளும் மீன்பிடிக்கப் புறப்பட்டனர்.

கடலுக்குள் சென்றதும், "குருவோ எங்களை விட உங்கள் மீது தான் மீன்களுக்குக் கோபம் அதிகமாக இருக்கும். அதனால் [illegible] போடுவதற்குப் பதில், உங்களையே கயிற்றில் கட்டி கடலுக்குள் இறக்கி விடுகிறோம்" என்றான் மட்டி.

உங்களைக் கடிப்பதற்காகக் கடலில் உள்ள எல்லா மீன்களும் வரும் உடனே நாங்கள் எல்லா மீன்களையும் பிடித்து விடுகிறோம் என்றான் மடையன். குரு சற்று நேரம் யோசித்தார். நீங்கள் சொல்வதும் சரியே" என்றார்.

உடனே சீடர்கள் அவரைக் கயிற்றில் கட்டி, கடலில் தூக்கிப் போட்டனர். நீச்சல் தெரியாத பரமார்த்தர். நீருக்குள் மூழ்கியதும் மூச்சு விட முடியாமல் துடித்தார்.

நீரின் மேல் பரப்பில் காற்றுக் குமிழிகள் வருவதைக் கண்ட சீடர்கள், "அடேயப்பா! நம் குரு நிறைய மீன்களைப் பிடிக்கிறார் போலிருக்கிறது" என்றனர்.

பரமார்த்தரின் வயிறு முழுவதும் நீர் நிரம்பியதால் குமுழிகள் வருவது நின்றன. எல்லா மீன்களையும் பிடித்து விட்டார் என்று நினைத்த சீடர்கள். நீரிலிருந்து குருவைத் தூக்கினர்.

ஆனால் பரமார்த்தரோ மயங்கிக் கிடந்தார். மீன்களோடு நீண்ட நேரம் சண்டை போட்டதால் களைத்து விட்டார்" என்றான் மட்டி கண் விழித்த பரமார்த்தர். சீடர்களே! இன்னும் நம் மீது. கடலுக்கு இருக்கும் கோபம் தீரவில்லை. எப்படியோ இந்தத் தடவை தப்பித்துக் கொண்டோம். இனிமேல் கடல் பக்கமே போகவேண்டாம் என்றார்.

கடைசியில் கடலையும் மீன்களையும் திட்டிய படி அனைவரும் கரை சேர்ந்தனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்து கொள்ளுங்கள். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சித்தியடையத் தவறிய மாணவர்களை கவனியுங்கள்

பாரத தேசம் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி சுதந்திரமடைந்தது. இந்திய தேசத்தின் முதலாவது பிரதமராக ஜவஹர்லால் நேரு தெரிவு செய்யப்படுகிறார்.

சுதந்திர பாரதத்தின் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு தடல்புடலாக நடைபெறுகிறது.

பிரதமர் நேரு தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறார்.

எனினும் அங்கு தேசபிதா காந்தியடிகளைக் காணவில்லை. அங்கிருக்கக்கூடிய அனைவரும் காந்தியடிகள் எங்கே என்ற கேள்வியைத் தமக்குள் எழுப்பிக் கொண்டே இருந்தனர்.

பின்னர் அதுபற்றி காந்தியடிகளிடம் பத்திரிகையாளர்கள் வினவியபோது, ஓர் இடத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் மூண்டுவிட்டது. அந்த இடத்துக்குச் செல்லாமல், தேசியக் கொடி ஏற்றுகின்ற விழாவில் பங்கேற்றிருந்தால் அந்தக் கலவரம் பூதாகரமாகி இருக்கும்.

ஆக, தேசியக் கொடியை ஏற்றுவதில் கலந்து கொள்வதைவிட, கலவரம் நடக்கின்ற இடத்துக்குச் சென்று அந்தக் கலவரத்தைத் தடுப்பதுதான் முதன்மையான விடயம்; ஆகையால்தான் தேசியக் கொடி ஏற்றுகின்ற நிகழ்வில் என்னால் பங்குபற்ற முடியவில்லை என்றார் காந்தி.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும்.

அதாவது, வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுவதைவிட, தோற்றவர்களை உற்சாகப்படுத்துவதில்தான் ஒட்டுமொத்த வெற்றியும் தங்கியுள்ளது.

இங்குதான் நாம் மிகவும் நிதானமாகச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

ஆம், 2024ஆம் ஆண்டின் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பல்லைக்கழக அனுமதி கிடைக்கின்ற அளவில் பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் ஏதோவொரு வகையில் தங்களுக்கான பாதையை வகுத்துக்கொள்வர்.

ஆனால், முழுமை பெறாத அல்லது பல்கலைக்கழக அனுமதிக்குப் போதுமான பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் பற்றியே நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். கவனிக்க வேண்டும்.

அவர்கள் தங்களின் எதிர்காலத்தை எங்ஙனம் வகுக்கப் போகிறார்கள், அதற்குத் தேவையான ஆலோசனை வழிகாட்டல்கள், உயர்படிப்புக்கான வாய்ப்புகள் தொடர்பில் அவர்களை நாம் சரியாக வழிப்படுத்துவோமாக இருந்தால், அந்த மாணவர்களும் நிச்சயம் சாதனை படைப்பர்.

ஆக, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஒவ்வொருவர் மீதும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளும் மக்கள் சமூகமும் கருசனை கொண்டு அவர்களை வழிப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்.

இதைச் செய்வதுதான் காலத்தின் தேவை என்பதை உணர்வது அவசியம்.

# ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்த இந்தியாவின் அனுமதி தேவையில்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பொய் சொல்வதாக உதய கம்மன்பில சாடல்

இந்தியாவின் அனுமதியுடனேயே கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களையும் பகிரங்கப்படுத்த முடியும்என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது.

ஒப்பந்தத்தில் எவ்விடத்திலும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டைப்பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவுடன் கைச்சாத்திட்ட 7 ஒப்பந்தங்களை அரசாங்கம் இதுவரையில் பகிரங்கப்படுத்தவில்லை. இந்த ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சிகளும் சிவில் அமைப்பினரும் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்ற நிலையில், இந்தியாவின் அனுமதியுடன் தான் இந்த ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்த முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரின் கருத்து முற்றிலும் பொய்யானது. இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள 7 ஒப்பந்தங்களில் இரண்டு ஒப்பந்தங்களை நான் முழுமையாகப் பரிசீலனை செய்தேன். ஒப்பந்தங்களின் எவ்விடத்திலும் இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

இலங்கை, நிலப்பரப்பில் சிறிய நாடாக இருந்தாலும் சுயாதீன நாடு. இலங்கையின் இறையாண்மையை இந்தியா மதிக்கின்ற போது இந்த அரசாங்கம் ஏன் மலினப்படுத்துகிறது என்பதை அறிய முடியவில்லை.

இலங்கையானது வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையில் இந்தியாவை நம்பியிருப்பது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றார். (ந-7)

## பல்கலைக்கழக ஆணைக்குழுவில் யாழ்.பல்கலை மாணவர் முறையீடு

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது மாணவ ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விதிகளை மீறி, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கமைவாக நடந்து கொள்வதாகவும் இந்த விதிமீறல்கள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி பல்கலைக்கழக விடுதி ஒன்றுக்குள் நான்காம்வருட மாணவன் ஒருவர் குடிபோதையில் சென்று அனுமதி பெறாமல் அறை ஒன்றில் தங்கியிருந்த சம்பவம் தொடர்பில் முதலாம் ஆண்டு மாணவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அம் முறைப்பாட்டுக்கமைய நடவடிக்கை எடுக்காமல் முறைப்பாடு செய்த மாணவர்கள் உட்பட விடுதியில் தங்கியிருந்த முதலாம் ஆண்டு மாணவர்களை அச்சுறுத்தும் வகையில், மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியே செல்லும் நேரம் முடிவடைந்த பின்னர் இரவு வேளையில் வீதி வழியாக வேறொரு விடுதிக்கு அழைத்துச் சென்று அறை ஒன்றில் வைத்துப் பூட்டிய பின்னர் அங்கு வலுக்கட்டாயமாகப் பொய் வாக்குமூலங்களில் கையொப்பம் இடுமாறு பணிக்கப்பட்டதாகவும் மாணவர்களின் சம்மதமின்றி காணொளி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாகவுமே மூன்று மாணவர்களும் தமது முறைப்பாடுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைவாகத் துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளாமல் சட்டத்துக்கு மாறாக மாணவ ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் மாணவர்களை விசாரணைக்கு அழைப்பது முதல் விசாரணை நடை முறைகள் உட்பட சட்டத்துக்கு முரணாகச் செய்யப்படும் விசாரணைகள் பற்றி பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் திரும்பத் திரும்ப முறைப்பாடு செய்யும் மாணவர்களுக்கெதிராகவே விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## தரம் 1, 6 இல் புதிய கல்வி 2026 இல் அமுலாகும்

### பிரதமர் அறிவிப்பு

குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்குத் தொந்தரவு இல்லாத கல்வி முறை 2026 இல் முதலாம் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

இது வாக்குகளுக்கான திட்டம் அல்ல, மாறாக நாட்டில் கல்வியை மேம்படுத்துவதற்கான ஓர் உண்மையான நடவடிக்கை என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆசிரியர்களை நியமிப்பது முறையாக இல்லை என்றும் எதிர்காலத்தில் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல, வீரம்புகெதர, பிதுருவெல்ல, பில்லஸ்ஸ, மாவத்தகம மற்றும் பரகஹதெனிய பிரதேசங்களில் நடைபெற்ற மக்கள் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (ந-7)

## பிரசாரக் கூட்டத்தை நிறுத்தக் கோரியவர் கைது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நிறுத்துமாறு கோரிய நபரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொட்டடிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தினை நிறுத்தி விட்டு தேசிய மக்கள் சக்தியினரை வெளியேறக் கோரிய நபரைக் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தார் எனும் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரசாரக் கூட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாவை கலட்டி பிராங்கிளி பராசக்தி அம்மன் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவைகலட்டி பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் (2025) எதிர்வரும் மே மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம் பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய ஆதீனகர்த்தா சி. கதிரவேலன் தெரிவித்துள்ளார். (3-8)


## நூல் அறிமுகமும் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே. பிரபாகரன் எழுதிய "கல்வி ஆய்வின் அடிப்படைகள்" நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் நூல் ஆய்வுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற் துறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் நிகழ்த்தவுள்ளார். (3-8)



யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய கொடியேற்றம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெயிலிற்கு உகந்த நீர் மோர்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஸ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தயிரிலிருந்து வெண்ணெயைக் கடைந்து எடுத்த பின்பு கிடைப்பது தான் மோராகும். எனவே மோரில் கொழுப்புச் சத்து இருக்க மாட்டாது. மீதியுள்ள கல்சியம் சத்துக்களும் நீர்ச் சத்துக்களும் பாலில் உள்ள புரதச்சத்துக்களும் அப்படியே மோரில் காணப்படும்.

மோரில் இஞ்சி, கொத்தமல்லி, புதினா இலை, உப்பு சேர்த்து பருகலாம். எனவே புரதச் சத்து கல்சியத்துடன் வெயில் காலத்தில் அதிக வியர்வையால் இழக்கப்படும் உப்பு சத்தும் சேர்த்துக் கிடைக்கும். எனவே தினமும் ஒரு கப் மோர் அருந்துவது ஆரோக்கியமானதாகும். கல்சியம் சத்துக் காணப்படுவதால் என்புகளுக்குச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

மோர் குறைந்த கலோரிகளைக் கொண்டது. செரிமான அமைப்பை மேம்படுத்த மோர் அருந்தலாம். மோர் குடித்துக் கொண்டு வந்தால் அசிரிற்றி பிரச்சினையிலிருந்து நமக்கு நிவாரணம் கிடைக்கும். மோர் கல்லீரல் மற்றும் உடலில் இருந்து நச்சுக்களை நீக்குகிறது. மோர் குடிப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

மோர் குழந்தைகளுக்கு சிறந்த பானமாகும். இளநீரை விட சிறந்த பானம் மோர் என்று கூட சொல்லலாம்.

பால் மோராக மாற்றி தயாரிக்கும் போது மோரில் உருவாகும் லக்ரோபசிலஸ் குடலின் செயற்பாட்டைச் சீராக வைத்திருக்க உதவும்.

அதாவது மோரில் நல்ல பக்றீரியாக்கள் நிறையக் கிடைப்பதால் உடலின் ஆரோக்கியத்தைச் சீராக்கும். சீரணத்தை சீராக்கும். ஒரு டம்ளர் மோரை அருந்தும் போது தினசரி ஒரு நாளைக்குத் தேவையான றைபோ பிளேவின் ஊட்டச் சத்துக் கிடைக்கும். இது உடலுக்கு உடனடியான சக்தியை, பலத்தைக் கொடுக்கும்.



மோரில் காணப்படும் கல்சியம் என்னும் ஊட்டச் சத்தானது என்புகளில் மட்டுமல்ல பற்களையும் பலப்படுத்தும். புளிப்பேப்பம், நெஞ்செரிவு என்பன ஏற்படும் போது மோர் அருந்தினால் சிறந்த பலனைக் கொடுக்கும். வெயில் காலத்தில் தினமும் மோரை அருந்தும் போது நீர் இழப்பை தடுக்கக்கூடியதாக இருக்கும்.

தோலில் ஈரப்பதனை தக்க வைப்புதால் தோலானது வறட்சியடைவதனை மோரை அருந்துவதால் தடுக்கலாம். எனவே சருமம் பளபளப்பாகவும் இருக்கும். கிட்டத்தட்ட ஒரு டம்ளர் மோரை தினமும் அருந்தினால் 116 மில்லிக்கிராம் அளவுக்கு கல்சியச் சத்து எமக்கு கிடைக்கிறது. இது என்புகளின் அடர்த்தியைப் பேண உதவுகிறது. கோடை காலத்தில் மிக அளவான உப்பு சேர்த்து ஓர் இரு கிளாஸ் மோர் அருந்துவதால் கோடையில் இருந்து வெகுவாகப் பாதுகாக்கும்.

இஞ்சி, சீரகம், பெருங்காயம், கொத்தமல்லி கறிவேப்பிலை சேர்த்து சுவையினையும் ஆரோக்கியத்தையும் கூட்டிக் கொள்ளலாம். தினமும் ஒரு டம்ளர் மோர் குடித்து வந்தால் இரத்த அழுத்தத்தினை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம். மோர் சுவையாக இருக்கிறது என்பதை விட நமக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது. மோர் இயற்கையான முறையில் மற்றும் சரியான வெப்ப நிலையில் குடித்தால் மிகுந்த நன்மை பயக்கும்.

மோர் அருந்தி வருவதால் கல்லீரல் மற்றும் உடலில் இருந்து நச்சுக்களை நீக்குகிறது. மிகவும் காரமான உணவுகளை உட்கொள்ளும் போது, உணவு செரிமானம் ஆவதில் சிரமம் இருந்தால் நீங்கள் சாப்பிடும் போது மோர் அருந்தலாம்.

மேலும் மோர் உடற் சூட்டைத் தணித்து வயிற்று உப்பிசம் மற்றும் மலச் சிக்கலை தடுக்கிறது. தினமும் மோர் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் காலத்தில் வயிற்றில் ஏற்படும் வாய்வு பிரச்சினைகளுக்கும் நிவாரணம் கிடைக்கும்.

கோடை காலத்தில் உடலை நீர்ச்சத்துடன் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். இத்தகைய சூழ்நிலையில் நீங்கள் தொடர்ந்து மோர் குடித்து வந்தால் உங்கள் உடலில் எப்போதும் நீர்ச் சத்துடன் இருக்கும். கோடை காலத்தில் தொடர்ந்து மோர் குடிப்பதால் வயிற்றின் வெப்பம் தணிந்து உள்ளிருந்து புத்துணர்ச்சியை பெறலாம்.

உடல் எடையைக் குறைக்கவும் மோர் அருந்தலாம். மோர் குடிப்பதால் உடலின் வளர்சி மாற்ற அளவு அதிகரிக்கிறது. இது உடலின் எடையைக் குறைக்க உதவுகிறது. மோர் மிகக் குறைந்த கலோரிகளைக் கொண்டுள்ளது. ஆனால் இது உடல் எடையைக் குறைக்கத் தேவையான மற்ற அனைத்து ஊட்டச் சத்துக்களையும் வழங்குகிறது.

மோரில் புரதங்கள், விற்றமின்கள், தாதுக்கள், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் போன்ற தாதுக்கள் உள்ளன.

இதனை உட்கொள்வதால் வயிறு நிரம்பியது போன்ற உணர்வு ஏற்படும். பசியும் இருக்காது. மோரானது விற்றமின் C மற்றும் B ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு சத்துக்களும் முடி மற்றும் சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கிறது.

மோரில் புரோபயாடிக் லாக்டிக் அமிலம் நிறைந்துள்ளது. இது தோல் மற்றும் முடிக்கு நீர்ச்சத்தினை வழங்குகிறது.

மோரை ஒரு போதும் வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது.

இதனால் வயிற்றுப் பிரச்சினைகள் ஏற்படும். வெயிலில் செல்வதற்கு முன் மோர் குடிக்கலாம். ஆனால் வெயிலில் இருந்து வந்தவுடனே குளிர்ந்த மோர் குடிக்க வேண்டாம்.

ஒரு நாளைக்கு 2 அல்லது 3 கிளாஸ் மோர் அருந்தலாம். செரிமானப் பிரச்சினைகள் இருந்தால் மோரின் இஞ்சி, சீரகம், புதினா சேர்த்து அருந்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுமை...

அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

மேலும் மூன்று பாடங்களிலும் "ஏ" சித்திகளைப் பெற்ற மாணவர்களின் சதவீதம் 3.45 என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சிறப்பு ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே பரீட்சைகள் ஆணையர் இவ்வாறு தெரிவித்தார்.

பெறுபேறுகளின்படி பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 64.73 சதவீதமானவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

பல்கலைக்கழக சேர்க்கைக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், 2023ஆம் ஆண்டில் 64.33 சதவீதத்தை எட்டியதாகவும் குறிப்பிட்ட அவர்,

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு 274,361 பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும் அவர்களில் 177, 588 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்ததாகவும் கூறினார்.

மேலும் தேர்வில் 222,774 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 51,587 தனியார் பரீட்சார்த்திகளும் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பரீட்சையில் 3 முக்கிய பாடங்களிலும் மொத்தம் 29,244 பரீட்சார்த்திகள் தோல்வியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-7)

## சிறுமி...

துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் எடுத்த முயற்சியால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கைது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தின் நடவடிக்கையின்மூலமே வெளிக்கொணரப்பட்டது. மேற்படி சிறுமி 12 வயதில் இருந்தே துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி இந்தச் சிறுமி எமது அலுவலகத்துக்கு வருகை தந்து தனக்கு ஏற்பட்ட துஷ்பிரயோக அவலத்தை முறையிட்டார். எமது அலுவலகம் துரிதமாகச் செயற்பட்டு அன்றைய தினமே வடக்கு மாகாண நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் ஊடாக மேற்படி சிறுமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றார். (ம-7,60)

## மே 2 - 16 வரை...

பேற்றை மீளாய்வு செய்வதற்காக அடுத்த மாதம் 02ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகள் ONLINE EXAMS. GOV.LK எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை 456 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)

## கிளிநொச்சியில்...

பெருக்கெடுத்துள்ளது.

பெரும்பாலான வீதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பொதுமக்களின் போக்குவரத்து சில மணிநேரம் நெருக்கடிக்குள்ளானது.

அத்தோடு வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் சென்றமையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக நகர்ப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற மதில்கள் காரணமாக வெள்ள நீர் வடிந்தோட முடியாத நிலையில் வீடுகளுக்குள்ளும், வீதிகளிலும் வெள்ளம் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் புகுந்த வெள்ள நீரை வெளியேற்ற முடியாது பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். (ந-7)

## அமெரிக்க...

கருத்துக்களை வெளியிட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட சஜித் இது குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எழுதிய கடிதத்தால், அமெரிக்கா விதித்த தீர்வை வரி 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டதாகப் பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

பின்னர் வேறொரு தூதுக்குழு, அமெரிக்கா பயணமாகி, கலந்துரையாடல்கள் எமக்கு சாதகமாக இறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

இந்த வரியைத் திருத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை என்றார். (ந-7)

## வடக்...

இன்று மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலையின் போது ஏற்படும் மின்னல் தாக்கங்களில் இருந்து மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள உரிய பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-7)

## டிசம்...

கரிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்த்தன எச்சரித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதாரம் குறித்த தனது புரிதலுக்கு அமைவாக, நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திற்குள் நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றும் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால், பாராளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் இலங்கையை மீட்டெடுக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



මහජන සම්පත
திகதி 2025.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 5814
J 3 3 0 5 1 3
අත සම්පත
J 0 5 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 0389
National Lotteries Board



தன நிதானய
திகதி -2025.04.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1844
B 11 15 28 80 B
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 93133



மெகா பவர்
திகதி 27/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2162
I 13 04 20 40 77



ජය JAYA
திகதி 2025.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 082
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
P 3 0 6 8



கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4056
சீட்டிழுப்பு திகதி 27.04.2025
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
H 04 25 65 69
H
தேசிய லொத்தர் சபை



HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 1123
மீனம் 16 18 39 54 மீனம்
17110 03



உத்தியோகபூர்வ முடிவுகள்
සුපිරි ධන සම්පත
27.04.2025 வெற்றி வாரம் 522
ஆங்கில எழுத்து X மற்றும் வெற்றி இலக்கம் 5 2 1 4 0 4
84324
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,186,869.20
DLB



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2788
சீட்டிழுப்பு திகதி 2025.04.27 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 13 51 52 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,543,156.80
DLB



சனிதா
திகதி 27.04.2025 வெற்றி வாரம் 4949
வெற்றி இலக்கங்கள் 19 22 64 77 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,751,838.00
60543
DLB



சசிரி
வெற்றி வாரம் 671
சீட்டிழுப்பு திகதி 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 21 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB



ராசி
சீட்டிழுப்பு வாரம் 4500
சீட்டிழுப்பு திகதி 27.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 38 39 56 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,117,668.80
195340
DLB



ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 31 10 24 33 70
சுப்பர் இலக்கம்
1964
27.04.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.573,193,771.80
DLB



ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2614
சீட்டிழுப்பு திகதி 2025.04.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
22 24 57 66 I
653875
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (1073)
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
கிளைகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கொழும்பு


# நட்பு ரீதியான ஒப்பந்தத்தில் நிபந்தனைகளா ஆராயாது அரசு கையொப்பம் இட்டது ஏன்?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நட்பு ரீதியான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது எனில், அதனை வெளிப்படுத்துவற்கு ஏன் அனுமதிக்காக காத்திருக்க வேண்டும். இந்தியாவின் அனுமதி பெறவேண்டும் எனில் அவ்வாறான நிபந்தனையுடன் ஏன் அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நன்மை கிடைக்கும் வகையிலான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது பொருத்தமானது. உலகின் பாரிய பொருளாதார வல்லரசான இந்தியா கடந்த காலங்களில் இலங்கையின் எதிர்காலம் குறித்து அழுத்தம் பிரயோகித்துள்ள, எதிர்காலத்திலும் பிரயோகிக்கக் கூடிய நட்பு நாடாகும். எனவே இந்தியாவுடன் நாம் எமது தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

எவ்வாறிருப்பினும் இந்தியப் பிரதமர் மோடியின் விஜயத்தின் போது கையெழுத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களில் ஒன்றையேனும் அரசாங்கம் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கவில்லை. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் இணையதளத்திலும் பதிவேற்றப்படவில்லை. ஊடகங்களுக்கும் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் நாம் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருக்கும் நிலைமையிலும் அரசாங்கம் அவற்றை மறைத்துக் கொண்டிருக்கிறது.

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாகக் கோருமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் கூறுகின்றார். இந்தியாவின் இணக்கப்பாடு இன்றி ஒப்பந்தங்கள் குறித்து தெரிவிக்க முடியாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்றார். ஒப்பந்தங்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கே இவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஒப்பந்தங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்.

உண்மையில் அவருக்கே அவை தொடர்பில் எதுவும் தெரியாது. மரணித்து உயிர்த்தெழுந்ததைப் போன்று பேசிக் கொண்டிருக்கின்றார். நட்பு ரீதியான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருந்தால் எதற்காக இந்தியாவிடம் அனுமதி பெற வேண்டும்? அவ்வாறான நிபந்தனையுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கின்றது என்றால் அது தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்தல் இல்லையா? ஏன் இவ்வாறான நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்கியது என்பதை நளிந்த ஜயதிஸ்ஸ தெளிவுபடுத்த வேண்டும். உறுதிப்படுத்தப்படும் தேர்தலில் வாக்களிக்க முன்னர் மக்கள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஒப்பந்தங்களை வெளிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டின் இறையாண்மை காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம் என்றார். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2831)
076 825 7716 (ஆகாஸ்)

Pearson International College
♦இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
♦தற்போது O/L எழுதிய மாணவர்களுக்கான Basic English, Dip in English நடைபெறுகின்றது.
♦கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
♦எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
♦இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching
074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario
(1009)

நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும். (4049)
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
077 844 9861, 076 776 3291



A/L தொழினுட்பப்பிரிவு
Techna
Technical Institute
Smart Thinking Leads To Innovate
A/L 2024 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை | பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|---|---|
| I.சியாமளன் | A 2B | 04 | R.வேனுசன் | A 2C | 27 |
| S.சந்தோஸ் | 3A | 02 | S.சுபானுயா | B 2C | 29 |
| S.சுவேதன் | 2B C | 02 | C.சதுஜன் | B 2C | 30 |
| P.கோபிதரன் | 3C | 06 | N.கவிநயா | 3C | 33 |
| B.நேருஜன் | A B C | 07 | T.சிந்துஜன் | B 2C | 34 |
| R.ஆருத்திரன் | 2B C | 08 | J.கலைச்சாந்த் | B C S | 35 |
| B.சுடரோன் | 3B | 10 | L.ஜெனுசாந்த் | 3C | 36 |
| J.சுபர்ஷா | 3B | 12 | K.யதுசன் | 3C | 37 |
| R.டிலக்சன் அருள்ராஜ் | A B C | 14 | V.ஜெயசூர்யா | 3C | 39 |
| K.ஆரூரன் | 3B | 16 | N.அருண்ஜா | B 2C | 52 |
| V.லவகுமார் | 2B C | 17 | E.நிதுசன் | B 2C | 55 |
| S.கஜானன் | B 2G | 19 | K.புகழன் | C 2S | 58 |
| V.சுவேந்தன் | 2B C | 21 | S.N.நுஸ்கி அஹமட் | C 2S | 08 |
| J.ஜெயவினு | 2B C | 23 | M.I.M.ஹசன் | A 2S | 10 |

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை | பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|---|---|
| S.யதுராகவி | A B C | 04 | S.சிவதனுசியா | B 2C | 32 |
| T.அங்கசன் | 2B C | 11 | R.சரணிகன் | 2C S | 39 |
| S.சிவாசன் | 2B C | 12 | K.விமலன் | 2C S | 41 |
| S.சாகித்தியா | 2B C | 13 | T.விஜிந்தா | 3C | 42 |
| M.குயின்சியா | 2B C | 15 | M.பவனிதன் | 3C | 46 |
| S.தர்சிகன் | 2B C | 16 | S.ஜெனிபர் சாரா | 3B | 10 |
| K.விதுர்ஷனா | 2B C | 18 | Y.நவின் | 2B C | 12 |
| S.கஸ்வினி | B 2C | 21 | S.ஹம்சிகா | 2B C | 15 |
| J.பகின்சனா | 2B C | 25 | R.அகர்கான் | B 2C | 18 |
| S.ஜதுஷா | 3C | 26 | J.றியாஸ் | 3C | 11 |
| S.விஷாகன் | 3C | 30 | M.ஆதிரா | 2C S | 18 |

(4052)
A/L 2024 REPEAT BATCH
A/L 2026 புதிய பிரிவு
ஆரம்பம்
30.04.2025 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு
077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 03ஆம் மாடி, யாழ்ப்பாணம்



உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2822)

வீடு வாடகைக்கு
சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 6 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்படும். (4047)
077 710 9638
076 742 4301

குழந்தை பராமரிப்பாளர் தேவை
வயது : 2
இடம் : வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
நேரம் : காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை (1077)
077 696 2565

வேலைக்கு ஆட்கள் தேவை
இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு : (1069)
077 609 6581

விற்பனைக்குண்டு
கோப்பாய் பிரதான வீதியில் புதிதாகத் திறக்கப்பட்ட அழகுக்கலை நிலைய பொருட்கள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. (1071)
076 679 1581

மலர் வளையம்
புத்தம் புதியவை
Small 2500/=
Large 3500/=
(C-2829)
ஏ - சன்ஸ்
No.148, Main Street, Jaffna.
021 222 2695 077 429 0613


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.